நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15- ஆம் நாள் புதன்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை மாதம் 02-ம் நாள்.

**CNR No.TNTV07- 009413-2024**

in

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.206/2024**

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 20.12.2024

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்: 13.03.2026

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

தலையாமங்கலம் காவல் நிலையம்,

குற்ற எண்.91/2024,

சட்டப்பிரிவுகள். 296(b), 118(1), 351(3) BNS ...குற்றமுறையீட்டாளர்.

/எதிர்/

1) மணியன், வயது.60/24,

த/பெ. தங்கவேல்,

வடக்கு தெரு, ரெங்கநாதபுரம்.

2) ரமேஷ்குமார், வயது. 32/24

த/பெ. மணியன்,

வடக்கு தெரு, ரெங்கநாதபுரம்.

3) கலா, வயது.54/24

க/பெ. மணியன்,

வடக்கு தெரு, ரெங்கநாதபுரம். ... 1 முதல் 3 எதிரிகள்

| Sl. No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | A1-19.09.2024,<br>A2 and A3-AB Surrender 17.10.2024 |

<table>
<tr><td>2.</td><td>The Date of filing of Complaint / Final Report in the Court</td><td>20.12.2024</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C.,</td><td>24.03.2025</td></tr>
<tr><td>4.</td><td>Miscellaneous petition and thier results including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code.</td><td>N.A.</td></tr>
<tr><td>5.</td><td>Date of Examination in chief and cross</td><td>
<table>
<tr><td>PW</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>1</td><td>17.10.2025</td><td>17.10.2025</td></tr>
<tr><td>2</td><td>17.10.2025</td><td>17.10.2025</td></tr>
<tr><td>3</td><td>21.01.2026</td><td>21.01.2026</td></tr>
<tr><td>4</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
<tr><td>5</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
<tr><td>6</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
<tr><td>7</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr>
<tr><td>8</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>6.</td><td>Date of Examination of the Accused under section 313 Cr.P.C.,</td><td>13.03.2026</td></tr>
<tr><td>7.</td><td>Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be</td><td>N.A.</td></tr>
<tr><td>8.</td><td>Grant of stay by Superior Courts</td><td>N.A.</td></tr>
</table>

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று (08.04.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் ஆய்வாளர், தலையாமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 91/2024 ன் கீழ் எதிரி மீது பிரிவுகள்296(b), 118(1), 351(3) BNS - ன் கீழான குற்றம் எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

<u>**குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**</u>

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, ரெங்கநாதபுரம், வடக்கு தெருவில் கடந்த 12.09.2024 ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் வாதி செல்லப்பா வீட்டில் இருந்தபோது அவருடைய மனைவி சீலாவிற்கும் அதே தெருவை சேர்ந்த மணியன் மனைவி கலா என்வருக்கும வேலி பிரச்சனை சம்மந்தமாக வாய்தகராறு ஏற்பட்டதை வாதியானவர் வெளியில் வந்து பார்த்தபோது அங்கு வந்த எதிரிகள் மூவரும் வாதியையும், அவரது மனைவியையும் பாரத்து தேவடியா குச்சிகாரி செருக்கி மவனே என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், 2 ம் எதிரி வாதியை கீழே தள்ளிவிட்டதில் வாதி கீழே விழுந்து இடது தோள்பட்டையில் கல் குத்தி இரத்த காயம் ஏற்பட்டும், 1ம் எதிரி மணியன் வாதியை மண்வெட்டியால் முதுகின் இடது மற்றும் வலது பகுதியில் வெட்டியும், 1 மற்றும் 2 ம் எதிரிகள் வாதிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 1ம் எதிரி வாதியை பார்த்து மண் வெட்டியைக் காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1) BNS -ன் கீழும், 3 ம் எதிரி மீது பிரிவு 296(b) BNS-ன் கீழ் தண்டித்தக்கவர்கள் என்று தலையாமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 230BNSS-ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரிகள் தரப்பும் கேட்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1) BNS -ன் கீழும், 3 ம் எதிரி மீது பிரிவு 296(b) BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்ட போது எதிரிகள் தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றத்தை தாங்கள் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார்கள். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. எதிரிகள் கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், புகார் கொடுத்த நபர் பட்டியல் சாட்சி 1, கண்ணுற்ற பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3, கேள்விப்பட்ட பட்டியல் சாட்சி 5, பார்வை மகசர் பட்டியல் சாட்சிகள் 6 மற்றும் 7 , மருத்துவப் பட்டியல் சாட்சி 8 புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியமளித்த காவல் உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமார் ஆகியோர் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பட்டியல் சாட்சிகள் 4 மற்றும் 9 ஆகியோர் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு</u> -

i) கடந்த 12.09.2024-ம் தேதியன்று இரவு சுமார் 9.00 மணி முதல் 9.30 மணியளவில் அ.சா.1, அவரது மனைவியான அ.சா.2 ஆகியோர் அவர்களது குழந்தைகளுடன் வீட்டிலிருந்தபோது, எதிரிகள் மூவரும் அவர்களின் வீட்டு வாசல் முன்பாக நின்றுக்கொண்டு, அவர்களுக்கும், எதிரிகளுக்கும் இருந்த வேலி பிரச்சனைக்காக எதிரிகள் அ.சா.1ன் மனைவியான அ.சா.2 யை குச்சிக்காரி மவளே, தேவடியா மவளே என்று திட்டியுள்ளனர். அப்போது ஏன் திட்டுறீர்கள் என்றும், பேசிக்கொள்ளலாம் என்று அ.சா.1 சொல்லிக்கொண்டிருந்தபோதே 2ம் எதிரி அ.சா.1யை குப்புற தள்ளிவிட்டதில் அ.சா.1க்கு தோள்பட்டையில் அடிபட்டுவிட்டது. 1ம் எதிரி மண்வெட்டியால் அ.சா.1ன் முதுகு பக்கத்தில் வெட்டியுள்ளார். அ.சா.1ன் சத்தத்தை கேட்டு வந்த வெள்ளிநாதன் மகன் கவியரசன், ராஜேந்திரன் மகன் தமிழழரசன் ஆகியோர்கள் ஓடி வருவதை பார்த்த எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் பட்டாபிராமன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1யை சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். அ.சா.1 7-8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலீசார் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள். அ.சா.1ன் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) கடந்த 12.09.2024- தேதியன்று இரவு சுமார் 9.30 மணியளவில் அ.சா.1 தனது வீட்டில் இருந்தபோது, எதிரிகள் மூவரும் அ.சா.1 ஐ தாக்கியதில் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு பட்டியல் சாட்சி 9 உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலை பெற்று கடந்த 13.09.2024-ந் தேதியன்று மேற்படி உதவி ஆய்வாளர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 யை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து நிலைய மனு எண்.229/2024 ஆக மனு பதிவு செய்து, மனு விசாரணைக்கு பின் சம்பவம் உண்மையென தெரியவந்த நிலையில் கடந்த 19.09.2024 ம் தேதியன்று காவல் நிலைய குற்ற எண்.91/2024 ல் BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) ன் கீழ் எதிரிகளின் மீது அ.சா.ஆ-6 முதல் தகவல் அறிக்கையின் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

iii) பின்னர் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 19.20 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.5 ஜெயபால் மற்றும் அ.சா.6 வேலாயுதம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ-7 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ-8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும், அன்றையதினமே சம்பவயிடத்திலிருந்து அதே சாட்சிகளின் முன்னிலையில் எதிரி மணியன் என்பவரது வீட்டில் இருந்து சம்பவத்தின் போது பயன்படுத்திய மரக்கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றினை மேற்படி உதவி ஆய்வாளர் 19.45 மணியளவில் அ.சா.ஆ-9 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். அதிலும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

iv) சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி மணியன் என்பவர் வாலிஓடை பாலம் அருகே நின்றுக்கொண்டிருந்தவதை அன்றையதினமே 20.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து, நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை அ.சா.ஆ.10 படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அது அ.சா.ஆ-10 நீதிமன்ற வழக்கு சொத்து எண்.105/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் மற்ற எதிரிகளான ரமேஷ்குமார், கலா ஆகியோர்கள் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிக்காட்டுதலுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தினை தெரிந்துக்கொண்டுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம் அடைந்த அ.சா.1 க்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், சிகிச்சை அளித்த மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவர் பட்டியல் சாட்சி 8

திருமதி.சுகந்தப்பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ-5 விபத்து பதிவேட்டுடன் இணைந்த கூடிய காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி மருத்துவரின் காயச்சான்றின் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று சான்று வழங்கியுள்ளார். இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 118(2), 351(3) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 15.10.2024-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக அ.சா.8 காவல் உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமார் அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை பிரிவு 351(1)(b) BNSS-ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு கேட்கப்பட்டது.

9. <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-

அரசு தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், 1 முதல் 3 எதிரிகள் தான் குற்ற செயலில் ஈடுபட்டு அ.சா.1 மற்றும் அவரது மனைவியான அ.சா.2 யை தகாத வார்த்தைகளால் திட்டி, 1ம் எதிரி மண்வெட்டியால் தாக்கியும், 2ம் எதிரி வாதியை கீழே தள்ளிவிட்டு கல் குத்தியதில் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 1ம் எதிரி மண்வெட்டியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாகக் கூறி எனவே1 முதல் 3 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

10. <u>எதிரிகள் தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட ஆவணங்களும் சாட்சிகளின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எதிரிகள் தங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட நபர்கள் அரசு தரப்பு வழக்கிற்க அனுசரணையாக சாட்சியம் அளிக்கவில்லை என்று கூறிசந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார் .

11. <u>இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:-

1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1) BNS -ன் கீழும், 3ம் எதிரி மீது பிரிவு 296(b) BNS-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

<u>12) தீர்வு</u>

இவ்வழக்கில் புகார் கொடுத்த மற்றும் காயமடைந்த நபரான அ. சா. 1, சம்பத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, வழக்கு சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சியான அ.சா. 4, பார்வை மகசரில் கையொப்பம் செய்த சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6, காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7 மற்றும் புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அ.சா.8 ஆகியோர்களது சாட்சியம் மற்றும் சான்றாவனங்களின் வாயிலாக எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக சந்தேகத்திற்க்கிடமின்றி நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பில் கடமையாகும்.

13) வழக்கு சம்பவம் குறித்து காலதாமதமின்றி புகார் கொடுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து பரிசீலக்கையில் கடந்த 12.9.2024 ஆம் தேதி இரவு 9:30 மணி அளவில் அ. சா. 1 வீட்டு வாசலில் சம்பவம் நடந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தில் காயமடைந்த அ. சா. 1 கடந்த 12.9.2024 ம் தேதி இரவு 10.15 மணிக்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிசச்சைக்காக சேர்ந்துள்ளார். மேற்படி அரசு மருத்துவமனையிலிருந்து தலையமங்கலம் காவல் நிலைய பொறுப்பிலிருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முரளி என்பவர் தகவலை பெற்று மறுநாள் 13.9.2024 அன்று புகார்வாக்குமூலம் பதிவு செய்து மனு எண் 229/2024 வழங்கி விசாரணைக்கு பின்பு 19.9.2024 அன்று அ.சா.1 யை விசரித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது

14) இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னதாகவே அ.சா.1 குடுப்பதிற்கும் எதிரி குடுப்பதிற்கும் இடையே வேலி சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததாகவும் சம்பவ தினத்தன்று அ.சா.1 ன் மனைவியான ஷீலா என்பவருக்கும் எதிரியின் மனைவியான கலா என்பவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டு திட்டிக் கொண்டிருந்த போது 1 முதல் 3 எதிரிகள் பிரச்சனையில் ஈடுபட்டதாக புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்தே அ.சா.1 மற்றும் அ.சா.2 நீதிமன்ற சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளனர்.

15) **புகார் கொடுத்த மற்றும் காயமடைந்த நபரான அ. சா. 1 தனது சாட்சியத்தில்** "எங்களுக்குள் இருந்த வேலி பிரச்சனைக்காக ஆஜர் எதிரிகள் 3 வரும் எங்கள் வீட்டு வாசல் முன்பாக நின்று கொண்டு எங்களுக்குள் இருந்த வேலி பிரச்சனைக்காக **ஆஜர் எதிரிகள் எனது மனைவியை குச்சிக்காரி மவளே தேவடியா மவளே திட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஏன் திட்டுகிறீர்கள் என்றும். பேசிக்கொள்ளலாம் என்றும் சொல்லிக்கொண்டிருந்த போதே மணியன் மகன் ரமேஷ் என்பவற் என்னை குப்புற தள்ளிவிட்டதில் எனக்கு தோள்பட்டையில் அடிபட்டுவிட்டது. மணியன் என்பவர் மண்வெட்டியால் எனது முதுகு பக்கத்தில் வெட்டினார்.** எனது சத்தத்தை கேட்டு வந்த வெள்ளிநாதன் மகன் கவியரசன் ராஜேந்திரன் மகன் தமிழழரசன் ஆகியோர்கள் ஓடி வருவதை பார்த்த ஆஜர் எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள்." என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** "வேலி வைத்தற்கு பின்னிட்டு 3 ம் எதிரி கலா அவரது வீட்டு குப்பையை கூட்டி எனது வீட்டு வேலியில் வைத்துவிடுவதால் எனது மனைவிக்கும். அவருக்கும் அடிக்கடி வாய்தகராறு ஏற்படும் என்றால் சரிதான். அடிக்கடி என் மனைவிக்கும் 3 ம் எதிரிக்கும் இடையே பிரச்சனை வந்துக்கொண்டிருக்கும். அன்று இரவு சண்டை நடக்கும்போது எனது மகனும் நான் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு 1ம் எதிரி மணியனை அடிக்க சென்றபோது. அதில் நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டதென்றால் சரியல்ல" என்று கூறியுள்ளார்

**16)சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 ன் மனைவி அ.சா.2 தனது சாட்சியத்தில்** " கடந்த 12.09.2024 ம் தேதி இரவு சுமார் 9.20 மணியளவில் எனக்கும் கலா என்பவருக்கும் வேலி சம்மந்தமாக தகராறு ஏற்பட்டது. அப்போது, **எதிரி கலா என்பவர் குச்சிக்காரி மகளே தேவடியா மகளே என்று அசிங்கமான திட்டினார் அப்போது என் கணவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டு வந்த எனது கணவர் எதிரி கலாவிடம் யாரை சத்தம் போடுகிறீர் என கேட்டுக்கொண்டிருந்த போது எதிரி ரமேஷ் என்பவர் எனது கணவரை பிடித்து கீழே தள்ளிவிட்டார். அதில் என் கணவர் குப்புற விழுந்ததில் எனது கணவரின் தாவாங்கொட்டையில் அடிபட்டது. எனது கணவரால் எழுந்திரிக்க முடியாமல் இருந்ததால் மணியன் என்பவர் மண்வெட்டியால் எனது கணவரின் முதுகிலும் தோள்பட்டையிலும் வெட்டிவிட்டார்.** நாங்கள் சத்தம் போடவே வெள்ளிநாதன் மகன் கவியரசனும், ராஜேந்திரன் மகனும் ஓடிவந்து எனது கணவரை தூக்கியபோது ரத்தம் வந்தது. அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களை பார்த்து இந்த முறை தப்பித்துவிட்டிங்க

இன்னொரு முறை பார்த்துக்கொள்கிறோம் என்று கூறி விட்டு ஓடிவிட்டார்கள்" என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** "எதிரிகள் தரப்பில் எனது மகன் கல்லால் அடித்துவிட்டதாக கூறி புகார் கொடுத்தாக என்னிடம் கேட்டார்கள். நான் என் மகன் அவ்வாறு செய்யவில்லை என்றும். அவன் தூங்கி கொண்டிருந்ததாகவும் அவர்களிடம் சொன்னேன்.எனது மகன் யாரை கல்லால் அடித்தாக போலிசார் சொன்னார்கள் என்றால் - 1ம் எதிரி மணியனை கல்லால் அடித்தாக சொன்னார்கள். 1ம் எதிரி மணியன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது மகனை விசாரித்தபோது அவர் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார்." என்று கூறியுள்ளார் .

17) **சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ. சா. 3 தனது சாட்சியத்தில்** " 1ம் எதிரி மணியன் மற்றும் 2, 3 எதிரிகளை எனக்கு தெரியும். அசா மற்றும் 2 ஆகியோர்களை எனக்கு தெரியும். **வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது** என்று கூறி சாட்சியமளித்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.

18) சம்பவ நாளில் 1 முதல் 3 எதிரிகள் தான்அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தகாத வார்த்தைகளால் திட்டி அ.சா.1 யை 2 ம்எதிரி ரமேஷ் கீழே தள்ளிவிட்டதாகவும், 1ம் எதிரி மண்வெட்டியால் முதுகில் வெட்டியதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவத்தின்போது அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி 4 சத்தம் கேட்டு அங்கு வந்ததாகவும், அப்பாது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.3 வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று கூறி சாட்சியமளித்து பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

19) அ.சா.1 யை சம்பவத்திற்கு பிறகு அ.சா.4 பட்டாபிராமன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து சென்றதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியமளித்துள்ளனர். **அ.சா.1 சிகிச்சைக்கு அழைத்து சென்ற மற்றும் கேள்வி பட்ட சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில்** " ஒரு நாள் நான் எனது வீட்டிலிருந்தபோது 108 ஆம்புலன்ஸ் எனது தெருவிற்கு வந்தது. அந்த 108 ஆம்புலன்ஸில் செல்லப்பா என்பவரை அழைத்துச் சென்றார்கள். அதன்பிறகு நான் அங்கிருந்தவர்களிடம் என்னவென்று கேட்டபோது எதோ பிரச்சனை என்று சொன்னார்கள். யாரோடு பிரச்சனை என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை" என்று கூறி சாட்சியமளித்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.

20) எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை தொடர்புபடுத்தும் விதமாக தனிப்பட்ட நபர்கள் சாட்சியமளிக்கவில்லை என்றாலும் கூட காயமடைந்த நபரான அ.சா.1 மற்றும் அவரது மனைவியான அ.சா.2ன் சாட்சியம் நம்பகத்தன்மை உடையதாகவும், எதிரிகள் தாக்கியதால் தான் அ.சா.1க்கு முதுகில் சொற்ப காயம் ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்யும் விதமாகவும் மேற்கண்ட நபர்களின் சாட்சியமும், சான்றாவணங்களும் அமைந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

21) **காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ. சா. 7 தனது சாட்சியத்தில்** " இரவு 10.15 மணியளவில் 45 வயதுடைய செல்லப்பா என்ற நபரை அவரது உறவினரான பட்டாபிராமன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது, அடையாளம் தெரிந்த 3 நபர்களால் அன்றைய தினம் இரவு 9:30 மணிக்கு வீட்டின் எதிரில் **மண் வெட்டியால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது 1. இடது பக்கம் முதுகின் மேல்பகுதியில் 6x3x2 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. 2. வலது பக்கம் முதுகின் மேல்பகுதியில் 6x2 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.** அவருக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு பதிவு செய்து AR 2201442 உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவர் 15.09.2024ம் தேதியன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு நெஞ்சுபகுதியில் எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது நார்மலாக இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை பொறுத்து 03.10.2024ம் தேதியன்று சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன்" என்று கூறி சாட்சியமாளித்துள்ளார்

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** " காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது என்னிடம் சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான், காயம்பட்ட நபர் தடுமாறி கூர்மையான மற்றும் கல் போன்ற ஆயதத்தில் விழும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். " என்று கூறியுள்ளார்.

22) காயம்பட்ட அ.சா.1யை மருத்துவமனைக்கு அ.சா.4 பட்டாபிராமன் என்பவர் தான் சிகிச்சைக்கு அழைத்து வந்ததாக மருத்துவர் கூறியுள்ள நிலையில் அ.சா.4 வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று கூறி பொய்சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. மேலும் அ.சா.1ன் முதுகில் சிதைந்த காயமும், சிராய்ப்பு காயமும் காணப்பட்டதாக மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். 1ம் எதிரி முதுகில் மண்வெட்டியால் சம்பவத்தின் போது தாக்கியதாக சொல்லியுள்ளதை தொடர்புபடுத்தும் விதமாகவே மருத்துவரால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

23) மேலும் அ.சா.1 க்கு தோள்பட்டையில் கல் குத்தி காயம் காணப்பட்டதாக விபத்து பதிவேட்டிலும் சாட்சியத்திலும் குறிப்பிடப்படவில்லை. அரசு தரப்பில் சம்பவம் நடந்த நாள், நேரம், சம்பவம் நடந்த இடம், சம்பவத்தின்போது 1ம் எதிரி அ.சா.1 யை மண்வெட்டியால் தாக்கியதால் தான் அ.சா.1 க்கு முதுகில் சொற்பகாயம் ஏற்பட்டுள்ளது என்பதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்துள்ளனர் என்று தீர்மானிக்கிறது.

i) சம்பவத்தின் போது 1 முதல் 3 எதிரிகள் அ.சா.2 யை தகாத வார்த்தைகளால் திட்டியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 கூறியிருந்தாலும், 1 முதல் 3 எதிரிகள் அவ்வாறு பேசியதால் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு முகசுளிப்பிற்கு ஆளானதாகவோ, அவமானத்திற்குள்ளாதாகவோ புகாரிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் குறிப்பிடவில்லை. இந்நிலையில் 1 முதல் 3 எதிரிகள், அ.சா.2 யை தகாத வார்த்தைகளால் திட்டி குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று தீர்மானிக்க இயலாது. எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவு 296(b)BNS ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செயதுள்ளனர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

ii)சம்பவத்தின் போது 1ம் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அதனால் அச்சம் ஏற்பட்டு உயிர் பயம் ஏற்பட்டதாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. இந்நிலையில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 யை கொலைமிரட்டல் விடுத்து குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று தீர்மானிக்க இயலாது. எனவே 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 351(3)BNS ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய தவறியுள்ளனர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

iii) அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களிலிருந்து 1ம் எதிரி அ.சா.1 யை மண்வெட்டியால் தாக்கியதால் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தை நிரூபணம் செய்யும் வகையில் மருத்துவரால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அமைந்துள்ளது. எனவே அ.சா.1 க்கு 1ம் எதிரி தான் தன்னிச்சையாக சொற்ப காயம் ஏற்படுத்தியுள்ளதாக பிரிவு 118(1) BNS ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 118(1) BNS வின் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் 1ம் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்து அவருக்கு அளிக்க வேண்டிய தண்டனை குறித்து 258 BNSS-ன் கீழ் வினவியபோது எதிரி கீழ்கண்டவாறு பதில் அளித்தார்.

**எதிரி மணியன் ,**

**" இனிவரும் காலங்களில் இது போன்ற குற்ற செயல்களில் ஈடுபடமாட்டேன். குறைந்த பட்ச தண்டனையாக அபராதம் மட்டும் விதியுங்கள்"**

**(அசல் தீர்ப்புரையில் நீதிபதியின் கையால் எழுதப்பட்டுள்ளது)**

1ம் எதிரியின் வயது மற்றும் குடும்ப சூழ்நிலைகள் பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய பொறுப்புகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றத்திடம் மேற்படி குற்றவாளியை வழக்கின் தன்மை கருதி குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 3ன் கீழ் தன்னை விடுவிப்பு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனவே இவ்வழக்கின் எதிரிக்கு குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 3ன் கீழான பலனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே எதிரி மணியன், த/பெ. தங்கவேல் என்பவரை குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 3ன் கீழ் குறைந்தபட்ச தண்டனையுடன் கூடிய அபராதம் மட்டும் விதித்து விடுவிப்பு செய்து தீர்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் குற்றவாளி என தீர்வு காணப்பட்ட நபருக்கு மேற்படி சட்டத்தில் பிரிவு 12ன் கீழான பாதுகாப்பையும் உறுதிபடுத்த வேண்டும் என்று தீர்பளித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**

1) 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS ன் கீழும், 2ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1) BNS -ன் கீழும், 3ம் எதிரி மீது பிரிவு 296(b) BNS கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து 271(i) BNSS ன் கீழ் விடுதலை செய்தும்,

2) 1ம் எதிரியை சட்டப்பிரிவு 118(1) BNS ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து 1ம் எதிரி மீது பிரிவு 118(1) BNS ன் கீழான குற்றத்திற்கு **ஆறு மாத மெய்க்காவல் சிறைதண்டனை மற்றும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராத தொகையை கட்டத்தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டணையையும்** அனுபவிக்க உத்தரவிட்டு 271(ii) BNSS பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**மொத்த அபராத தொகை ரூ. 10, 000/-**

3) எதிரி கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

4)இந்த வழக்கில் கைப்பற்றபட்ட வழக்கு சொத்தான சி.பி.எண். 105/2024 ல் உள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்று -யை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

5) வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு 395, 396 BNSS ன்கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

| Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019 | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Description of the accused | | | | | | | Date of | | | | | | | | |
| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
| 1. | Thalayamangalam 60/2024 | Maniyan | Thangavel | Coolie | North Street, Renganathapuram | 60/24 | 12.09.2024 | 19.09.2024 | 19.09.2024 | Not Applicable | 17.10.2025 | 16.03.2026 | Conviction | 15.04.2026 | No Delay |
| 2 | Thalayamangalam 60/2024 | Rameshkumar | Maniyan | Coolie | North Street, Renganathapuram | 32/24 | 12.09.2024 | 19.09.2024 | 17.10.2024 AB Surrender | Not Applicable | 17.10.2025 | 16.03.2026 | Accquitted | 15.04.2026 | No Delay |
| 3 | Thalayamangalam 60/2024 | Kala | W/o. Maniyan | Coolie | North Street, Renganathapuram | 54/24 | 12.09.2024 | 19.09.2024 | 17.10.2024 AB Surrender | Not Applicable | 17.10.2025 | 16.03.2026 | Accquitted | 15.04.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர்எண்.2,

மன்னார்குடி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | செல்லப்பா | புகார்தாரர் |
| அ.சா.2 | ஷீலா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | கவியரசன் | கண்ணுற்ற சாட்சி (பிறழ் சாட்சி) |
| அ.சா.4 | பட்டாபிராமன் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.5 | ஜெயபால் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | வேலாயுதம் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | மருத்துவர் சுகந்திபிரியா | மருத்துவ சாட்சி |
| அ.சா.8 | திரு. உதயகுமார்,<br>காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரிக்கா ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சி |

**2. அரசு தரப்பு சான்றவாணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.09.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ. 2 | 19.09.2024 | பார்வை மகசரிலுள்ள அ.சா.5 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 19.09.2024 | பார்வை மசரிலுள்ள அ.சா.6 ன் 2 வது கையொப்பம் |
| அ.சா.ஆ. 4 | 19.09.2024 | கைப்பற்றுதல் மகரிலுள்ள அ.சா.6 ன் 2 வது கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 03.10.2024 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ. 6 | 19.09.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 19.09.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ. 8 | 19.09.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 9 | 19.09.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ. 10 | 19.09.2024 | படிவம் 91 |

3. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

4. அரசு தரப்பு சான்று பொருள்: சி.பி.எண். 105/2024 ல் உள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய

மண்வெட்டி ஒன்று

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர்எண்.2,

மன்னார்குடி.

**15.04.2026**

1ம் எதிரி தன் மீது இதற்கு முன்பு வேறு வழக்கு எதுவும் இல்லை என்று கூறினார். அதனால் குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் பிரிவு 1958 பிரிவு 3-ன் படி எதிரிக்கு அறிவுரை வழங்கி 1ம் எதிரியை, எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு அமைதி காக்க வேண்டும். நன்னடத்தையுடன் இருக்க வேண்டும், மீறினால் ஆறு மாத கால சிறை தண்டனை வழங்கப்படும் என்றும், 1ம் எதிரியை தனக்காவும், தனி நபர் ஒருவரும் ரூ.10,000/-க்கான பிணை பத்திரமும் நன்னடத்தையுடன் இருப்பதாக உறுதிமொழி பத்திரமும் எழுதி தர வேண்டும். ஆறு மாத கால தண்டனையை நிறுத்தி எதிரி விடுவிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

**குறிப்பு.**

1 இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2 இவ்வழக்கின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

3 இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சிகள் மூன்று வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

4 கு.வி.மு.ச. 363(5) ஆவது பிரிவின்படி மனனார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**நகல் :-**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.